**பூச்சி, நோய் தாக்குதல் இல்லை,குறைவான பராமரிப்பு**

**தேதி : 25.03.2012**

இயற்கை வழி விவசாயமோ ரசாயன வழி விவசாயமோ எதைப் பின்பற்றினாலும் சரி, ஒரே மாதிரியான பயிர்களை மட்டும் விவசாயம் செய்யாமல் பலவிதமான பயிர்கள், ரகங்கள் என வயலையே சோதனைக் கூடமாக மாற்றும் விவசாய விஞ்ஞானிகள் பலர் இங்கே உண்டு. அவர்களில் ஒருவர், தஞ்சாவூர் மாவட்டம், கண்ணந்தங்குடி கிராமத்தைச் சேர்ந்த ராஜா. இவர், காஷ்மீர் பகுதிகளில் பாரம்பரியமாக சாகுபடி செய்யப்படும் 'சர்வதி' ரக நெல்லை தனது வயலில் சாகுபடி செய்திருக்கிறார்.

இவருடைய நண்பர் நடராஜன், ராணுவத்தில் இன்ஜினீயராக வேலை பார்கிறார். அவர்தான் காஷ்மீரில் இருந்து சர்வதி ரக நெல்லைக் கொண்டு வந்தார். அதைத்தான் இவர் சாகுபடி செய்திருக்கிறார். நம்ம பகுதியிலேயும் நன்றாகவே விளைகிறது அந்த நெல் என்று உற்சாகமாக சொன்ன ராஜா, அந்த உற்சாகம் குறையாமல் தொடர்ந்தார். இவர் குடும்பத்துக்குச் சொந்தமாக 20 ஏக்கர் நிலம் இருக்கிறது. 10 ஏக்கரில் கடலை, 10 ஏக்கரில் நெல் சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்.'இயற்கை விவசாய முறையில் இதை சாகுபடி செய் என்று சொல்லித்தான் ஒரு கிலோ விதைநெல்லை மட்டும் இவரிடம் கொடுத்தார் நடராஜன்.

அதனால், 33 சென்ட் நிலத்தில் மட்டும்தான் அதைப் போட்டிருக்கிறார். முழுதாக இயற்கையில் பண்ணி சரியாக வராமல் போய்விட்டால் என்று பயம் வந்ததால், கொஞ்சம் ரசாயனத்தையும் பயன்படுத்தியிருப்பதாக கூறும் ராஜா, தன்னுடைய சாகுபடி முறையைப் பாடமாகவே சொல்ல ஆரம்பித்தார்.

12 நாள் நாற்று சர்வதி ரக நெல்லின் வயது 120 நாட்கள். இந்த ரக நெல், நீளமாகவும், அரிசி அதிசன்னமாகவும் இருக்கும். 33 சென்ட் நிலத்தில் ஒற்றை நாற்று முறையில் சாகுபடி செய்ய, 7 அடி நீளம் 6 அடி அகலத்துக்கு, பாலிதீன் சாக்கை விரித்துப் பாய் நாற்றாங்கால் அமைக்க வேண்டும்.

பாலிதீன் சாக்கின் மீது மண்ணைப் பரப்பி, 25 கிலோ தொழுவுரத்தைத் தூவி, தண்ணீர் தெளித்து சமப்படுத்த வேண்டும். அதில், 24 மணிநேரம் தண்ணீரில் ஊற வைக்கப்பட்ட ஒரு கிலோ விதைநெல்லை, பரவலாகத் தூவ வேண்டும். மறுநாள், அரை கிலோ டி.ஏ.பி. உரத்தைத் தெளித்து, பூவாளியில் தண்ணீர் தெளிக்க வேண்டும். மண்ணின் ஈரத்தன்மைக்கு ஏற்ப தினமும், மாலை நேரத்தில் தண்ணீர் கொடுக்க வேண்டும். 12-ம் நாள் நாற்றைப் பறித்து நடவு செய்யலாம். 25 சென்டி மீட்டர் இடைவெளி முன்னதாக சாகுபடி நிலத்தைத் தயாரிக்க வேண்டும். மூன்று சால் சேற்று உழவு செய்து, 10 கிலோ தொழுவுரத்தில் அசோஸ்பைரில்லம், பாஸ்போ-பாக்டீரியா

ஆகியவற்றில் தலா 800 கிராம் மற்றும் 500 கிராம் சூடோமோனஸ் ஆகியவற்றைக் கலந்து நிலத்தில் தூவி, ஒரு சால் உழவு ஓட்ட வேண்டும். பிறகு, 25 சென்டி மீட்டர் இடைவெளியில் ஒவ்வொரு நாற்றாக நடவு செய்ய வேண்டும். நடவிலிருந்து 15, 23 மற்றும் 30-ம் நாட்களில், கோனோவீடர் மூலம் களைகளை நிலத்தில் அழுத்திவிட வேண்டும். 108-ம் நாள் அறுவடை நடவு செய்த 40-ம் நாள் டி.ஏ.பி., யூரியா, பொட்டாஷ் கரைசலை வயலில் தெளிக்க வேண்டும். முதல் நாளே, மேற்சொன்ன இந்த மூன்று உரங்களிலும் தலா ஒரு கிலோ அளவுக்கு எடுத்து தண்ணீரில் கரைத்து, 24 மணிநேரம் வைத்திருந்து, அடியில் தேங்கும் கசடுகளை நீக்கிவிட்டு, அந்தக் கரைசலைப் பயன்படுத்தலாம். நிலத்தில் எப்போதும் ஈரம் இருக்குமாறு தண்ணீர் பாய்ச்சி வர வேண்டியது முக்கியம்.

இந்த ரக நெல்லின் இலைகளில் சுனைகள் அதிகமாக இருப்பதால் பூச்சிகள் மற்றும் நோய்கள் தாக்குவதில்லை. அதனால் வேறு பராமரிப்புகள் எதுவும் தேவையில்லை. 108-ம் நாளுக்கு மேல் அறுவடைக்குத் தயாராகி விடும். பதர்களே இல்லை சாகுபடிப் பாடம் முடித்த ராஜா, அறுவடை செய்த சமயத்தில், பயிர் நாலடி வரைக்கும் வளர்ந்திருந்திருந்தது. ஒண்ணரை அடி அளவுக்கு கதிர் இருந்தது. ஒவ்வொரு செடியிலயும் இருபத்திரண்டிலிருந்து இருபத்தெட்டு தூர் ஒவ்வொரு கதிரிலும் இருநூறில் இருந்து இருநூற்றி அறுபது நெல்மணி என்று நன்கு திரட்சியாக இருந்துள்ளது. பதர் என்கிற பேச்சுக்கே இடமில்லாமல் இருந்தது. 33 சென்டில் ஒன்பது மூட்டை (60 கிலோ மூட்டை) மகசூல் கிடைத்தது. ஒருவேளை முழுக்கவே இயற்கையில் செய்திருந்தால், இதைவிட கூடுதல் மகசூல் கிடைத்திருக்கும் என்ற ராஜா, இந்த அரிசி ரொம்ப சன்ன ரகமாக இருப்பதால் பிரியாணிக்கு அருமையாக இருக்குமாம். குறைவானப் பராமரிப்பிலேயே நன்றாக விளைவதால் இந்தப் பகுதி விவசாயிகள் நிறையபேர் விதைநெல் கேட்கிறார்கள். அதனால், விதைநெல்லாவே கிலோ 25 ரூபாய் என்றுகொடுக்கத் தீர்மானித்துள்ளதாக கூறுகிறார்.

இந்த அரிசிக்கு தமிழ்நாட்டில் எவ்வளவு விலை கிடைக்கும் என்று இப்போதைக்குக் கணிக்க முடியவில்லை. ஆனால், கண்டிப்பாக நல்ல வரவேற்பு இருக்கும் என்று மட்டும் தோன்றுவதாக கூறுகிறார். காஷ்மீரில் இந்த ரக விதைநெல்லை கிலோ 20 ரூபாய் என்று விக்கிறாங்களாம். அரிசி, 60 ரூபாயாம் என்று கணக்கு வழக்குகளையும் பேசினார். மண்ணை வளமாக்கும் தொழுவுரம் சர்வதி ரக விதைநெல்லைக் கொண்டு வந்த நடராஜனிடம் பேசியபோது, "ஜம்மு பகுதியில் இந்த ரகத்தைத்தான் அதிகளவு சாகுபடி செய்கிறார்கள். அங்கு ஏக்கருக்கு 33 முதல் 40 (60 கிலோ மூட்டை) மூட்டை வரை மகசூல் எடுக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் இந்த அரிசியைத்தான் சாப்பாட்டுக்குப் பயன்படுத்துகிறார்கள். அங்கு எல்லோரும் எருமை மாடு வைத்திருப்பார்கள். அதில் கிடைக்கும் எருவை மட்டும்தான் அடியுரமாக போடுகிறார்கள். பெரும்பாலும் ரசாயன உரம் பூச்சிக்கொல்லி இதையெல்லாம் பயன்படுத்துவதில்லை. தொடர்ந்து தொழுவுரம் போட்டுகிட்டே இருப்பதால் அங்கு மண்ணே கருப்பு கலரில் தான் இருக்கும் என்று கூறினார் பரம்பரையாகவே ஒற்றை நாற்று அவர்கள் பரம்பரை பரம்பரையாக, ஒரு ஒரு நாற்றாத்தான் நடவு செய்கிறார்கள். அங்கு அதிகளவு களைகளும் மண்டுவதில்லை. அதனால் களை எடுக்கும் வேலையும் குறைவு. ஜூன் மாதத்திலிருந்து அக்டோபர் மாசம் வரைக்கும் அங்கு

பனிப்பொழிவு குறைவாகவும் வெயில் அதிகமாவும் இருக்கும். பனி மூட்டத்தோடு, மழையும் பெய்யும். அந்த சமயத்தில்தான் இந்த ரகத்தை சாகுபடி செய்கிறார்கள். நம்ம பகுதியிலேயும் அதே சீதோஷ்ண நிலை இருக்கப்பதால்தான் இது நன்றாக விளையுது போல" என்று சொன்னார் நடராஜன்.

**தொடர்புக்கு,**

**நடராஜன், செல்போன்: 94888-85364**

**ராஜா, செல்போன்: 94433-33417.**